**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-03




# வினாத்தாள் - I




சுட்டெண்:- ..........................................

நேரம் :- 1 மணித்தியாலம்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
 ✱ **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
 ✱ **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

✱ **1, 2 ஆகிய வினாக்களின் மூன்று அடைப்புகளில் தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் இடையே ஒரு குறித்த தொடர்பு உண்டு. ஓர் அடைப்பில் உள்ள இரு உருக்களுக்கும் இடையே அத்தகைய தொடர்பு இல்லை. அந்த அடைப்பினைத் தெரிவு செய்க.**

(01) (1)  (2)  (3) 

(02) (1)  (2)  (3) 


(03) முதல் உருவிற்குச் சமனான உருவைத் தெரிவு செய்க.

 (1)  (2)  (3) 

(04) கீழே தரப்பட்டுள்ள பாடலில் உள்ள வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.


கற்ற கல்வி ஒருவரின்
சிறந்த செல்வமாகும்
........................ பண்புகள் இருப்பின்
நாடு உங்களைப் போற்றும்

(1) தீய
(2) நல்ல
(3) தாழ்ந்த

(05) 


உருவில் காணப்படும் சதுர வடிவக் கடதாசியை முதலில் முறிந்த கோட்டின் வழியே இரண்டாக மடித்து, இரு பக்கங்களையும் சேர்த்து புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டிய பின்னர் கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கையும் நாற்பக்கங்களின் எண்ணிக்கையும் முறையே,

(1) 4 உம் 1 உம் (2) 2 உம் 1 உம் (3) 4 உம் 2 உம்

(06) 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின்,

(1) $\frac{1}{4}$ இலும் குறைவாகும் (2) $\frac{1}{4}$ இற்குச் சமன் (3) $\frac{1}{4}$ இலும் கூடியதாகும்

(07) | 1 | 5 | 9 | | 2 | 6 | 10 | | 3 | 7 | 11 | ..................... வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) | 4 | 8 | 12 | (2) | 4 | 7 | 10 | (3) | 7 | 11 | 15 |

(08) கதிரிடம் இருந்த பணத் தொகையை விட ரூபாய் 30.00 கூடுதலாக நஸீரிடம் இருந்தது. நஸீர் ரூபாய் 15.00 ஐ கதிருக்கு கொடுத்தான். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) தற்போது கதிரை விட ரூபாய் 15.00 கூடுதலாக நஸீரிடம் உள்ளது.
(2) தற்போது கதிரை விட ரூபாய் 5.00 கூடுதலாக நஸீரிடம் உள்ளது.
(3) தற்போது இருவரிடமும் உள்ள பணத் தொகை சமனாகும்.

(09) 1000 தொடக்கம் 1010 வரையான எண்களை எழுதும்போது 0 இலக்கம் எத்தனை தடவைகள் இடம்பெறும்?

(1) 23 (2) 26 (3) 21

(10) தரப்பட்டுள்ள கோலத்திலுள்ள வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க,

| ↑ → ↓ ← | | → ↓ ← ↑ | | ↓ ← ↑ → | | |


(1) | ← ↓ ← ↑ | (2) | ← ↑ → ↓ | (3) | ↑ → ↓ ← |

kalvi.lk

(11) ஒரு சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள 5 பலகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. அவை எல்லாவற்றையும் பயன்படுத்தி பழமொழியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு குறைந்தபட்சம் எத்தனை பலகைகளின் அமைவை மாற்றுதல் வேண்டும்?

**நினைத்தது** | **நினைக்கத்** | **நாமொன்று** | **ஒன்று** | **தெய்வம்**

(1) மூன்றினை (2) இரண்டினை (3) நான்கினை

(12)



இக்கடிகாரத்தில் நிமிட முள் $\frac{3}{4}$ சுற்று சுற்றிய பின் கடிகார முகம் காட்டும் நேரம்?

(1) 8.00 (2) 8.10 (3) 8.05

(13) பாடசாலைக்குச் செல்லும் பிள்ளை காலையில் முதலில் மற்றும் கடைசியில் செய்யும் செயல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A = நித்திரை விட்டு எழுப்புதல் B = .......................................... C = ..........................................

D = .......................................... E = வீட்டை விட்டுச் செல்லல்

அதன்படி, B, C, D ஆகிய வெற்றிடங்களுக்குப் பொருத்தமானச் செயல்கள் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) B - ஆடை அணிதல் C - குளித்தல் D - உணவு உட்கொள்ளல்

(2) B - குளித்தல் C - ஆடை அணிதல் D - உணவு உட்கொள்ளல்

(3) B - உணவு உட்கொள்ளல் C - ஆடை அணிதல் D - குளித்தல்

(14) எமது வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் கணிதப் பாடத்தில் திறமையானவர்கள். சில மாணவர்கள் சுற்றாடல் பாடத்தில் திறமையானவர்கள். மேலேயுள்ள விபரங்களுக்கேற்ப, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) சில மாணவர்கள் சுற்றாடல் பாடத்தில் மட்டும் திறமையானவர்கள்.

(2) கணிதப் பாடத்தில் திறமையான எல்லா மாணவர்களும் சுற்றாடல் பாடத்திலும் திறமையானவர்கள்.

(3) சுற்றாடல் பாடத்தில் திறமையான எல்லா மாணவர்களும் கணிதப் பாடத்திலும் திறமையானவர்கள்.

(15)

| | | | | |
|---|---|---|---|---|
| ⊗ | ⌘ | ● | ▲ | ......... |
| ⌘ | ♦ | ⊗ | ⌘ | 14 |
| 8 | 6 | 9 | 9 | |

இங்கு தரப்பட்டுள்ள கூடுகளினுள்ளே இருக்கும் ஒவ்வொரு உருவிற்கும் ஏதோவொரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வுருக்களினுடைய பெறுமதிகளின் கூட்டுத்தொகைகள் நிலைக்குத்தாகவும், கிடையாகவும் தரப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான எண்,

(1) 18 (2) 16 (3) 20

(16) **இரு மாம்பழங்களின் விலை = தோடம்பழமொன்றின் விலை**

**இரு தோடம்பழங்களின் விலை = அன்னாசிப்பழமொன்றின் விலை**

பைசர், தினேஷ், அனில் ஆகியோர் வியாபாரியிடம் கொள்வனவு செய்த பழங்களின் விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பைசர் | தினேஷ் | அனில் |
|---|---|---|
| மாம்பழம் - 1 | மாம்பழங்கள் - 4 | மாம்பழங்கள் - 4 |
| தோடம்பழம் - 1 | தோடம்பழங்கள் - 2 | தோடம்பழம் - 1 |
| அன்னாசிப்பழங்கள் - 4 | அன்னாசிப்பழங்கள் - 3 | அன்னாசிப்பழங்கள் - 3 |

இத்தகவல்களுக்கேற்ப, குறைந்த பணம் செலவு செய்தவர் யார்?

(1) பைசர்

(2) தினேஷ்

(3) அனில்

(17) கீதா சிவப்பு நிறத்திற்கு விருப்பமில்லை. சீதா மஞ்சள் நிறத்திற்கு விருப்பமில்லை. மாலா வெள்ளை நிறத்திற்கு விருப்பமில்லை.

A வியாபாரியிடம் பச்சை நிறம், நீல நிறம், ஊதா நிறத் துணிகள் மட்டும் இருந்தன.


B வியாபாரியிடம் கறுப்பு நிறம், வெள்ளை நிறம், செம்மஞ்சள் நிறத் துணிகள் மட்டும் இருந்தன.


C வியாபாரியிடம் கபில நிறம், மஞ்சள் நிறம், இளஞ்சிவப்பு நிறத் துணிகள் மட்டும் இருந்தன.


அதன்படி, மூவரும் துணியைக் கொள்வனவு செய்யக்கூடிய வியாபாரி,


(1) A (2) B (3) C

(18) கீழுள்ள உருக் கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

 ..................


(1)


(2)


(3)



kalvi.lk

சுட்டெண்:-.............................................

(19) 



இத்தராசை சமநிலையடைவதற்கு A பக்கத்திலிருந்து எவ்வளவு சீனியை B பக்கத்திற்கு இட வேண்டும்?

(1) 2kg (2) 1kg (3) 3kg

(20) 



இம்முறையிலான 3 கடதாசிக் கீலங்களை ஒன்றின் மீது ஒன்று 2cm வைத்து ஒட்டினால் பெறப்படும் கடதாசிக் கீலத்தின் நீளம் எவ்வளவு?

(1) 36cm (2) 30cm (3) 32cm

(21) 


ஒரேயளவான கனவுருக்களையும் ஒரேயளவான சதுரமுகிகளையும் ஒன்றன் மீது ஒன்று ஒட்டுவதன் மூலம் இப்பெரிய கனவுரு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்பெரிய கனவுருவை அமைப்பதற்குத் தேவைப்பட்ட அதிகபட்ச ஒரேயளவான சதுரமுகிகளின் எண்ணிக்கையாக .இருக்கக்கூடியது,

(1) 5 (2) 4 (3) 3

(22) 



உரு A யில் காணக்கிடைக்கும் உரு B யைப் போன்ற வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 6 (3) 5




(23) 

இக்கடிகாரத்தின் நேரம் மணித்தியாலத்திற்கு 5 நிமிடங்கள் கூடுதலாகச் செல்லும். அதன்படி, இன்னும் 2 மணித்தியாலங்களின் பின் இக்கடிகார முகம் காட்டும் நேரம்,

(1) 10.10 (2) 10.05 (3) 10.20


(24) 

முதலில் தரப்பட்ட கடதாசித் துண்டை புள்ளிக்கோட்டின் வழியே அம்புக்குறி காட்டும் திசைக்கு மடித்தபின் காணக்கிடைக்கும் முறை,

(1)  (2)  (3) 


(25) "நாளை மறுநாள் தனது பிறந்தநாளாகும்" என்று சுனில் நேற்று முன்தினம் கூறினான். அதன்படி, சுனிலின் பிறந்தநாள் கொண்டாடப்படுவது,

(1) நாளை (2) இன்று (3) நாளை மறுநாள்

(26) 


இத்தராசில் 2 பூசனிக்காய்களும் 2 அன்னாசிப்பழங்களும் உள்ளன. 2 பூசனிக்காய்களிலும் கூடிய நிறையுடைய பூசனிக்காய் B ஆகும். இத்தராசு சமநிலை எனின், அன்னாசிப்பழங்களிலும் கூடிய நிறையுடைய அன்னாசிப்பழம்,

(1) C (2) D (3) கூறமுடியாது


(27) 

உருவில் காட்டப்பட்டுள்ளபடி, ஒரேயளவான ஐந்து சிறிய செவ்வக வடிவமான கார்ட்போர்ட் அட்டைகள் மேசையின் மீது வைக்கப்பட்டு பெரிய செவ்வகமொன்று அமைக்கப்பட்டது. பெரிய செவ்வக வடிவத்தின் அகலம் 6cm எனின், பெரிய செவ்வக வடிவத்தின் நீளம்,

(1) 8cm (2) 12cm (3) 10cm

(28) "சூரியனைக்கண்ட பனிபோல" எனும் உவமைத் தொடருக்கான கருத்தாக அமைவது,

(1) உடன் மறைவு (2) மலர்ச்சி (3) அழியாமை

(29) 


உருவில் காட்டப்பட்டுள்ள செவ்வக வடிவ அட்டையிலிருந்து வெட்டி எடுக்கக்கூடிய ஒருபக்க நீளம் 2cm ஆகக் கொண்ட சிறிய சதுர வடிவ அட்டைகளின் எண்ணிக்கை,

(1) 30 (2) 24 (3) 28

kalvi.lk


(30) வீட்டு வாசலில் மு.ப 7.00 இற்கு வடக்குத் திசை நோக்கி நின்றுகொண்டிருந்த கதிர் வலது புறமாக அரைச் சுற்று சுற்றி முன்னோக்கி நடந்து சென்றான். அப்போது அவனது நிழல் தென்படுவது,

(1) கதிரின் இடதுக் கைப்பக்கத்தில் (2) கதிருக்கு முன்னால் (3) கதிரின் வலதுக் கைப்பக்கத்தில்

(31) நாதனிடமும் சிவாவிடமும் சம அளவில் பணம் இருந்தது. நாதன் தன்னிடமிருந்த மொத்தப் பணத்திற்கு 4 பேனாக்களையும், சிவா தன்னிடமிருந்த மொத்தப் பணத்திற்கு 8 பென்சில்களையும் வாங்கினார்கள். பேனை ஒன்றின் விலை ரூபாய் 20.00 எனின், பென்சில் ஒன்றின் விலை,

(1) ரூபாய் 10.00 (2) ரூபாய் 12.00 (3) ரூபாய் 9.00

(32)




அருகிலுள்ள உரு எதன் அடிப்படையில் பாகுப்படுத்தப்பட்டுள்ளது?

(1) வசிக்கும் இடத்தின் அடிப்படையிலாகும்.

(2) கால்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலாகும்.

(3) உண்ணும் உணவின் அடிப்படையிலாகும்.


(33) வினாத்தாளொன்றில் 20 வினாக்கள் உள்ளன. அதில் சரியாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் 5 புள்ளிகள் வழங்கப்பட்டதுடன், பிழையாக விடையளிக்கும் ஒவ்வொரு வினாவிற்கும் 2 புள்ளிகள் கழிக்கப்பட்டன. அவ்வினாத்தாளில் 72 புள்ளிகள் பெற்ற வாசு எத்தனை வினாக்களுக்கு சரியாக விடைகளை எழுதியிருந்தான்?

(1) 16 (2) 15 (3) 14


(34) குறித்த புத்தகமொன்றில் 1 தொடக்கம் 109 வரையான பக்கங்கள் உள்ளன. அமீன் அப்புத்தகத்தில் 33 ஆவது பக்கத்திலிருந்து 68 ஆவது பக்கம் வரை வாசித்தான். அதன்படி, அமீன் வாசிக்காத பக்கங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 71 (2) 73 (3) 75

(35)



உரு A




உரு B

உரு A இல் காட்டப்பட்டுள்ளபடி, ஒரு பெரிய சதுரமுகியை உருவாக்க உரு B இல் காட்டப்பட்டுள்ள சிறிய சதுரமுகிகளுக்கு மேலும் எத்தனை சிறிய சதுரமுகிகளை சேர்க்க வேண்டும்?

(1) 13 (2) 16 (3) 12

(36)




3 பெட்டிகள் ஒன்றின் மீது ஒன்று வைக்கப்பட்டுள்ள முறை உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, 3 பெட்டிகளினதும் மொத்த நீளம்,

(1) 38cm (2) 46cm (3) 43cm


(37) சியானாவினதும், பரானாவினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 107 ஆகும். சியானாவின் வயதை விட பரானா 21 வருடங்கள் மூத்தவள் எனின், பரானாவின் வயது,

(1) 62 (2) 64 (3) 70

(38) மரமொன்றில் உள்ள பூக்கள் ஒவ்வொரு நாளும் முதலிலுள்ள பூக்களைப்போல மேலும் இரு மடங்காகும். முதல் நாள் மரத்தில் 3 பூக்கள் இருந்தன. அதன்படி, 5 ஆவது நாளின் முடிவில் மரத்தில் எத்தனை பூக்கள் இருக்கும்?

(1) 96 (2) 24 (3) 48

(39)



இவ்வுருவில் நிழற்றப்பட்ட முறையிலான எத்தனை பகுதிகளை வெட்ட முடியும்?

(1) 8 (2) 7 (3) 9

(40) மோகனுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். நாதனுக்கு இரண்டு நாட்கள் விட்டு ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். இன்று திங்கட்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைத்துள்ளது. இவற்றிற்கு அமைய பின்வரும் கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) இன்னும் 8 நாட்களில் இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.

(2) அடுத்த ஞாயிற்றுக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.

(3) அடுத்த வெள்ளிக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2024**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-03
# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
 ★ **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
 ★ **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

தாவரங்களது வேர்த்தொகுதி மண்ணையே ஆதாரமாகப் பற்றிக் கொண்டிருக்கிறது. வேர்த்தொகுதி மண்ணில் இருந்தே நீரையும் தேவையான போசணைக் கூறுகளையும் உறிஞ்சிக் கொள்கின்றன. பொதுவாகப் பயிரிடும் நிலங்களில் மூன்று வகையான மண் காணப்படுகிறது. அவைகளாவன மணல் மண், களி மண், இருவாட்டி மண் ஆகும். பயிர்ச்செய்கைகளுக்கு உகந்த மண் இருவாட்டி மண் ஆகும். இதனை லோம் மண் எனவும் அழைப்பர். இருவாட்டி மண் எனப்படுவது மண்ணும் களியும் சம அளவில் உள்ள கலவையாகும். மணல் மண்ணினதும் களி மண்ணினதும் பொதுவான குணவியல்புகளை இருவாட்டி மண்ணில் காணலாம். இருவாட்டி மண்ணில் வளி, நீர் ஆகியவற்றைப் போதியளவில் கொண்டிருக்கும். இதில் போசணைக் கூறுகளும் அதிகளவில் காணப்படும். இதனால் இருவாட்டி மண்ணில் தாவரங்கள் மிக செழிப்பாக வளரும்.

(i) இருவாட்டி மண்ணின் வேறு பெயர் யாது? ..........................................................

(ii) பயிரிடும் நிலங்களில் உள்ள மண்ணின் பிரதான மூன்று வகைகளும் எவை? ..........................................................

(iii) பயிர்ச்செய்கைகளுக்கு உகந்த மண் வகை எது? ..........................................................

(iv) தாவர வேர்கள் மண்ணிலிருந்து பெற்றுக்கொள்ளும் இரண்டு விடயங்களை எழுதுக.. ..........................................................

(v) பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக. (1) வளி :- .......................... (2) நீர் :- ..........................

**(02) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் வைத்து வாக்கியம் அமைக்குக.**

(i) மலை :- .......................................... (ii) மழை :- ..........................................

**(03) பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

அவன் சந்தைக்குச் சென்றான் :- ..........................................................

**(04) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

(i) வானொலி :- .......................................... (ii) கற்பாறை :- ..........................................

**(05) பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள மூன்று சொற்களில் எழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன. அச்சொற்களை இனங்கண்டு புள்ளிக்கோட்டின் மீது திருத்தமாய் எழுதுக.**

ஒரு காட்டிள் காகமும் முயலும் நன்பர்களாக வால்ந்து வந்தன.

(i) .............................. (ii) .............................. (iii) ..............................

**(06) ஒவ்வொரு வாக்கியத்தினதும் கருத்துக்குப் பொருத்தமான பழமொழியை பின்வரும் அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

( நாய்க்கேன் போர்த்தேங்காய் / ஆழமறியாமல் காலை விடாதே / தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் / போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து )

(i) மனநிறைவே ஒருவருக்குச் சிறந்த செல்வமாகும். :- ..........................................................

(ii) ஒன்றின் இயல்பை அறியமுன் அதனைச் செய்யத் தொடங்காதே. :- ..........................................................

**(07) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு மரபுத் தொடருக்கும் பொருத்தமான கருத்தைத் தரப்பட்டுள்ள அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

( மிக மகிழ்தல் / ஆபத்தில் கை விடுதல் / நித்திரை செய்தல் / அறிவு உண்டாதல் )

(i) கண் திறத்தல் :- .......................................... (ii) நட்டாற்றில் விடல் :- ..........................................

**(08) பின்வரும் வாக்கியத்தில் தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களின் எதிர்க்கருத்துச் சொற்களை வைத்து வாக்கியத்தை மீண்டும் எழுதுக.**

**நல்லொழுக்கம்** ஒருவரின் வாழ்வை **உயர்த்தும்** :- ..........................................................

**(09) இணைமொழிகளைப் பூர்த்திச் செய்க.** (i) சீரும் .............................. (ii) ஊண் ..............................

kalvi.lk

**(10) ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.**

(i) River :- .................................................... (ii) Meat :- ....................................................

**(11) பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்தை எழுதுக.**

(i)  :- Butter.........ly (ii)  :- Aer..........plane

**(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) Silence Please :- .................................................... (ii) Where do you live? :- ....................................................


**(13) வ(த்)தர ( වතුර ) என்ற சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.** ....................................................

**(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

தேநீர் குடியுங்கள் :- ....................................................


(15) பின்வரும் திண்மங்களுக்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் எழுதுக.

(i) சதுரமுகி :- .................................................... (ii) கனவுரு :- ....................................................


(16) (i) 


இவ்வெண்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக. ....................................................

(ii) 9070 எனும் எண்ணை எழுத்தில் எழுதுக. ....................................................

(17) 


இவ்வுருவின்படி, P இனால் காட்டப்பட்டுள்ள திசையை எழுதுக. ....................................................

(18) 

இவ்வுருவில் வட்டமொன்று காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவின் நான்கில் மூன்றை நிழற்றிக் காட்டுக.

(19)

| | | |
|---|---|---|
| | IX | VIII |
| IV | VI | X |

இக்கட்டத்திலுள்ள உரோம எண்குறிகளை பெறுமதி கூடிச்செல்லும் ஒழுங்கில் எழுதுக.

....................................................

(20)

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | | | | | | |

**தரப்பட்டுள்ள நாட்காட்டியைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

(i) நாட்காட்டியில் எந்த மாதம் காட்டப்பட்டுள்ளது? ....................................................

(ii) இம்மாதத்தில் எத்தனை திங்கட்கிழமைகள் உள்ளன? ....................................................

(iii) இம்மாதம் இருக்கக்கூடிய வருடம் ஒன்றினை எழுதுக. ....................................................

(21) குறித்த பாத்திரமொன்றில் $4l\ 600ml$ பால் இருந்தது. அதிலிருந்து பாலைக் குடிப்பதற்கு எடுத்த பின்னர் எஞ்சியிருந்த பாலின் அளவு $1l\ 900ml$ ஆகும். அதன்படி, குடிப்பதற்கு எடுத்த பாலின் அளவு யாது? ....................................................

(22) உருளைக்கிழங்கு 1kg இன் விலை ரூபாய் 160.00 ஆகும். அதன்படி, உருளைக்கிழங்கு 250g இன் விலை யாது? ..........

(23)

| | |
|---|---|
| □ | □ |
| − 3 | 7 |
| 4 | 6 |

வெற்றுக்கூடுகளை நிரப்புக.

(24) 3 நாட்கள் 6 மணித்தியாலங்களை மணித்தியாலத்தில் எழுதுக. ....................................................

(25) .................. , 9 , 15 , 21 , 27 , ............. எனும் எண் கோலத்தை இனங்கண்டு இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரண்டு எண்களையும் வெற்றிடங்களிலேயே எழுதுக.


(26) V , T , L , O , A , S , M இவ்வாங்கில எழுத்துக்களுள் சமச்சீர் அச்சுக்கள் வரையக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் எத்தனை உள்ளன? ....................................................

(27) பி.ப 10.30 இற்கு வீட்டிலிருந்து சென்ற அப்பா மீண்டும் 3 மணித்தியாலங்கள் 45 நிமிடங்களின் பின் வீட்டிற்கு வந்தார். அதன்படி, அவர் வீட்டிற்கு வந்த நேரத்தை எழுதுக. ....................................................

(28) பேனையொன்றின் விலை ரூபாய் 22.00 எனவும், அடிமட்டமொன்றின் விலை ரூபாய் 12.00 எனவும் கடையொன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. கமல் நான்கு பேனைகளையும், இரண்டு அடிமட்டங்களையும் வாங்கிக்கொண்டு கடை உரிமையாளருக்கு ரூபாய் 100.00 நாணயத் தாள்கள் இரண்டைக் கொடுத்தாராயின், அவருக்கு கிடைத்த மீதிப் பணம் எவ்வளவு? ....................................................

Education கல்வி
kalvi.lk

சுட்டெண்:-.........................................

(29) 


நாணயக் குற்றியொன்று மேலே சுண்டிவிடப்பட்டபோது A, B பக்கங்கள் விழுந்த தடவைகளின் எண்ணிக்கையை இவ்வரைபு காட்டுகிறது. அதன்படி,

(i) நாணயக் குற்றி மேலே சுண்டிவிடப்பட்ட மொத்தத் தடவைகளின் எண்ணிக்கை யாது? ...............

(ii) நாணயக் குற்றி A பக்கத்தை விட B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை யாது? ..........................................................................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) பிளாஸ்டிக் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) பிளாஸ்டிக் துண்டுகளை மண்ணில் சேர்த்தால் தாவரங்கள் நன்றாக வளரும்.
(2) பிளாஸ்டிக் துண்டுகள் மண்ணில் சேர்க்கப்படும்போது மண்ணரிப்பைத் தடுக்கிறது.
(3) பிளாஸ்டிக் துண்டுகள் மண்ணில் சேர்க்கப்படும்போது உக்குவதில்லை.




(31) இரவில் திரியும் பறவைகள்,
(1) வௌவால், ஆந்தை (2) கானாங்கோழி, மீன்கொத்தி (3) மரங்கொத்தி, கிளி

(32) அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் சேர்க்கக்கூடிய பொருள்,
(1) கொறுக்காய் (2) உப்பு (3) புளி

(33) உள்நாட்டில் பதிவுத் தபால் மூலம் கடிதத்தை அனுப்புவதற்கு குறைந்தபட்சம் எவ்வளவு பெறுமானமுள்ள முத்திரையை ஒட்ட வேண்டும்?
(1) ரூபாய் 90.00 (2) ரூபாய் 140.00 (3) ரூபாய் 110.00

(34) மின்னல் தாக்கத் தக்க சாத்தியம் மிக குறைவாக இருப்பது,
(1) வீதியில் பயணிக்கும் பேருந்தினுள் அமர்ந்துச் செல்லும்போது. (2) திறந்த மைதானத்தில் நிற்கும்போது.
(3) மரமொன்றின் கீழ் நிற்கும்போது.

(35) பாம்பு தீண்டும்போது **செய்யத்தகாதது**,
(1) தீண்டிய இடத்தை சவர்க்காரமிட்டு சுத்தமான நீரினால் கழுவுதல்.
(2) காயத்தின் மீது மருந்து வைத்து இறுக்கிக் கட்டுதல். (3) தீண்டிய பாம்பைப் பற்றி அறிந்துகொள்ளல்.

(36) பின்வரும் எந்த ஒழுங்கமைப்பில் இரும்பாணியை நோக்கி குண்டூசி கூடுதலாக கவரும்,
(1) 
(2) 
(3) 

(37) 
எமது வீட்டில் இவ்வுபகரணம் பயன்படுத்தப்படுவது,
(1) யானைக் குளிர்பானப் போத்தலில் மூடியைத் திறக்க. (2) மீன் டின் மூடியை வெட்டுவதற்கு
(3) யாதாயினும் ஒன்றை இறுக்கமாகப் பிடிக்க.

(38) சிறந்த நாற்றுக்களைப் பெற பொருத்தமான வித்துக்களின் சிறப்பியல்பு **அல்லாதது**,
(1) காயங்கள் இல்லாத வித்தாக இருத்தல் வேண்டும்.
(2) போதியளவு சேமிப்புணவையுடைய வித்தாக இருக்க வேண்டும்.
(3) நன்கு முதிர்ச்சியடையாத வித்தாக இருக்க வேண்டும்.

(39) நாம் இலவசமாகப் பெறும் சேவைகள்,
(1) போக்குவரத்து, தபால் (2) கல்வி, சுகாதாரம் (3) தொலைபேசி, மின்சாரம்

(40) மிளகாய் அரைப்பதற்கு முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட கருவி,
(1) அம்மி (2) துருவளை (3) ஆட்டுக்கல்

(41) தனது கழிவை குழி தோண்டிப் புதைக்கும் பிராணி,
(1) பசு (2) பூனை (3) யானை

(42)

| |
|---|
| தும்பி, கழுகு, ஆந்தை, சிலந்தி |

இக்கூட்டினுள் காணப்படும் பிராணிகள்,
(1) அனைத்தும் உண்ணிகள் (2) தாவர உண்ணிகள் (3) ஊன் உண்ணிகள்

(43) இரையைப் பிடிக்க நீண்ட நாக்கைக் கொண்ட பிராணிகள்,
(1) தவளை, உடும்பு (2) முதலை, நத்தை (3) மீன், வெட்டுக்கிளி

Education கல்வி
kalvi.lk

(44) நிலத்தில் படரும் கொடிகள்,
(1) பாகல், மிளகு (2) திராட்சை, வெற்றிலை (3) வற்றாளை, பூசனி

(45) கிராம சேவகரினால் வழங்கப்படும் சேவை **அல்லாதது**,
(1) தேசிய அடையாள அட்டைக்காகத் தகவல்கள் வழங்குதல்.
(2) பயிர்ச்செய்கைத் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.
(3) மரங்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரத்திற்கு பிரதேச செயலாளருக்கு சிபாரிசு சமர்ப்பித்தல்.

(46) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் படிமுறைகளின் எண்ணிக்கை,
(1) ஐந்து (2) பதின்மூன்று (3) பன்னிரெண்டு

(47) மருந்து உட்கொள்ளும்போது கவனம் செலுத்த வேண்டிய விடயம் **அல்லாதது**,
(1) மருந்து உட்கொள்ள வேண்டிய தடவைகள்.
(2) மருந்து உட்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள். (உணவு உண்ண முன் / உணவு உண்ட பின்)
(3) மருந்தில் அடங்கியுள்ள இரசாயனப் பதார்த்தங்களை தேடி அறிதல்.

(48) பொது வாகனங்களில் பயணிக்கும்போது அனுசரிக்க வேண்டிய ஒழுக்கம்,
(1) பேருந்தின் முன் பக்கத்தில் ஏறி பின் பக்கத்தில் இறங்குதல். (2) மிதிபலகையில் பயணிப்பதைத் தவிர்த்தல்.
(3) வாகனத்தின் உள்ளேயும் வாகனத்திலிருந்து வெளியேயும் கழிவுகளைப் போடுதல்.

(49) வெள்ளப்பெருக்கின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் செய்யக்கூடிய அவசர உதவி,
(1) சுத்தமான நீர், சுத்தமான உணவுகள் என்பவற்றை வழங்குதல்.
(2) நாட்டின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு பத்திரிகை, வானொலி ஆகியவற்றை வழங்குதல்.
(3) வீடுகளை சீரமைக்க நிதி உதவிகளை வழங்குதல்.


(50) "வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது பயன்பெற வேண்டும்" என்னும் கூற்றைக் கூறிய மன்னன்,
(1) பண்டுகாபயன் (2) தாதுசேனன் (3) பராக்கிரமபாகு

(51) இலங்கையின் மிக நீளமான ஓயா,
(1) கலா ஓயா (2) மல்வத்து ஓயா (3) கிரிந்தி ஓயா

(52) புகையிரதத்தில் பயணிக்கும்போது ஏற்படும் பிரதிகூலம்,
(1) புகையிரதத்தில் அதிகமான பொருட்களைக் கொண்டு செல்ல முடியும்.
(2) குறிப்பிட்ட இடங்களில் மட்டும் புகையிரதம் நிறுத்தப்படும். (3) குறைந்த செலவில் பயணங்களை மேற்கொள்ளலாம்.

(53) பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்குரிய ஒளிச் சமிக்ஞையில் "வீதியைக் கடக்குக" என்பதை உணர்த்துவது,
(1) மஞ்சள் நிற மனித உருவம் (2) சிவப்பு நிற மனித உருவம் (3) பச்சை நிற மனித உருவம்

(54) வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையினால் கிடைக்கும் பிரதிபலன் **அல்லாதது**,
(1) ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்கலாம். (2) இரசாயனத் தாக்கம் உள்ள காய்கறிகளைப் பெறலாம்.
(3) புத்தம் புதிய காய்கறிகளைப் பெறலாம்.

(55)



உருவில் உள்ளவாறு கட்டித் தொங்கவிடப்பட்ட சட்டக்காந்தம் ஓய்வு நிலைக்கு வரும்போது அதன் நீல நிற முனைவு எத்திசையைக் காட்டி நிற்கும்?
(1) தெற்குத் திசை (2) வடக்குத் திசை (3) மேற்குத் திசை

(56) மண்ணைத் தோண்டி முட்டையிட்டு புதைக்கும் பிராணிகள்,
(1) முயல், தவளை (2) முதலை, ஆமை (3) அணில், நத்தை

(57) நீரில் முழுமையாக அமிழ்ந்திருக்கும் தாவரங்கள்,
(1) வலிசினேரியா, ஐதரில்லா (2) சல்வீனியா, தாமரை (3) ஆகாயத்தாமரை, நாகதாளி

(58) வேர்த்தண்டு கிழங்கு மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரங்கள்,
(1) சதைகரைச்சான், பெகோனியா (2) கங்குன், பொன்னாங்கண்ணி (3) இஞ்சி, மஞ்சள்

(59) இலங்கையில் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் மக்கள் பிரிவினர்,
(1) தமிழர் - முஸ்லிம்கள் (2) தமிழர் - சிங்களவர் (3) பறங்கியர் - முஸ்லிம்கள்

**(60) "நாங்கள் படகில் ஏறி ஆற்றில் நீண்ட தூரம் பயணித்தோம்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..................................................................................................................................................

(2) ..................................................................................................................................................

(3) ..................................................................................................................................................

kalvi.lk